## தேதி குறிகாட்டிகள்

# சேச அய்யங்கார் ராமசாமி நினைவு
# தேசிய தமிழ் வழக்கு வாதப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 1. | வழக்குவாத போட்டியின் நிகழ்வுகள் வெளியிடுதல் அனைத்து கல்லூரிகளுக்கும் அழைப்பு விடுத்தல் | : | 01.12.2016 |
| 2. | போட்டியார்கள் பதிவு செய்ய கடைசி நாள் | : | 30.12.2016 |
| 3. | போட்டியாளர்கள் போட்டிக்கான வழக்கு குறித்த விளக்கங்கள், சந்தேகங்கள், கேட்பதற்கான கடைசி நாள் (விளக்கங்கள் மின்னஞ்சல் மூலம் மட்டும் கொடுக்கப்படும். கைபேசி, தொலைபேசி தடைசெய்யப்பட்டுள்ளது. muralimanu@gmail.com | : | 27-01-2017 (மதியம் 1.00 மணி) |
| 4. | போட்டியாளர்கள் தங்கள் பங்கேற்பை நேரில் உறுதி செய்ய வேண்டிய நாள் | : | 27-01-2017 (மதியம் 1.00 மணி) |
| 5. | எழுத்து வடிவிலான வாதுரை சமர்ப்பிக்க கடைசி நாள் | : | 27-01-2017 (மதியம் 1.00 மணி) |
| 6. | வழக்கு வாத போட்டி நாட்கள் | : | 28-01-2017 மற்றும் 29-01-2017 |
| 7. | துவக்க விழா | : | 27-01-2017, மாலை 4.00 மணி |
| 8. | பரிசளிப்பு விழா | : | 29-01-2017, மாலை 4.00 மணி |

**டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுச்சேரி**

மற்றும்

**இராகவேதா அறக்கட்டளை, மன்னார்குடி, தமிழ்நாடு**

இணைந்து நடத்தும்

# சேச அய்யங்கார் இராமசாமி நினைவு
# தேசிய தமிழ் வழக்கு வாதப் போட்டி

**சனவரி 27 – 29, 2017**

*இந்த புனையப்பட்ட வழக்கின் நிகழ்வுகள் வழக்குரைஞர்கள் இரா. முரளிதரன் மற்றும் அனுபமா பிள்ளை ஆகியவர்களால் சித்தரிக்கப்பட்டது. சம்பவங்கள் அனைத்தும் கற்பனையானவை.*

*சிதம்பரம் - மனுதாரர்*

*(எதிர்)*

*கமலா - எதிர் மனுதாரர்*

*சிதம்பரம் மற்றும் கமலாவின் குடும்பத்தினர் பழம் பெரும் ஆச்சார அனுஷ்டாணங்களை நடைமுறையில் பின்பற்றும் வைஷ்ணவ பிரிவைச் சார்ந்த, தமிழ்மொழி பேசும் இந்துக்கள் ஆவர். இவர்கள் தமிழ் நாட்டை பூர்வீகமாக கொண்டவர்கள்.*

*சிதம்பரம் குடும்பத்தினர் வைஷ்ணவ மதச் சடங்குகளில் நம்பிக்கையும், அவைகளை கடை பிடிப்பதில் முன்னுரிமை அளித்து வரும் ஆச்சாரமான குடும்பத்தை சார்ந்தவர்கள். இவர்கள் சங்கு சக்கரத்தை தங்களது தோள்களில் முத்திரையாக பதித்துக் கொள்வது மட்டுமல்லாமல் இந்து மதச் சடங்குகள் அனைத்திலும் பங்கேற்பதை உரிமையாக பாவித்து முறையாக பங்கேற்பவர். இந்து மதச் சடங்குகளில் ஆண்கள் பங்கேற்கும் போது அவர்களது மனைவியரும் பங்கேற்பது வழக்கமான நடைமுறையாக இருந்து வருகிறது. ஆனால் மனைவியர்கள் அவ்வாறு பங்கேற்பது கட்டாயம் அல்ல.*

*சிதம்பரம் தென்மாவட்டத்தில் உள்ள அரசுக் கல்லூரி ஒன்றில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். சிதம்பரம் கமலாவை கடந்த 1995ஆம் ஆண்டு இந்து திருமண சட்டப்படி திருமணம் செய்து கொண்டார். அத்திருமணம் பெரியோர்களால் நிச்சியக்கப்பட்ட திருமணமாக நடந்தேறியது. அத்திருமணமானது வடமாவட்டத்தில் நடைபெற்றது. கமலா ஒரு முதுநிலை பட்டதாரி. அவர் திருமணத்தின் போது வடமாவட்டத்தில் ஒரு நகரத்தில் பி.எட். கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். திருமணத்தின் போது கமலாவின் தகப்பனார் தன் மகளுக்கு திருமணத்திற்கு பிறகு பணி இடமாற்றம் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும், தென்மாவட்டத்தில் சிதரம்பரம் குடும்பம் வசித்து வரும் நகரிலேயே தனது குடும்ப வாழ்க்கையை சிதம்பரத்துடன் அமைத்துக் கொள்வார் என்றும் எழுத்து பூர்வமாக உறுதி அளித்திருந்தார்.*

*இருவரும் தங்களுடைய குடும்ப வாழ்க்கையை ஆனந்தமாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு அழகான ஒரு ஆண் குழந்தையும், அதன் பிறகு ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. இரண்டாவது குழந்தை பிறப்பிற்காக தன் தாய் வீட்டில் இருக்கும்போது, சிதம்பரத்தின் தாய் குழந்தையைப் பார்க்க கமலாவின் வீட்டிற்குச் சென்றார். அப்போது இருவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது.*

*அதன்பிறகு கமலாவை அவரது மாமியார் கடுமையாக நடத்தி வந்தார். அதிலிருந்தே கமலாவின் வாழ்க்கையில் நிம்மதி பாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கமலா முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சிக்கு பதிவு செய்து 'தமிழ் சமணர்களின் வரலாறு' என்ற தலைப்பில் வடமாநிலத்தில் ஆராய்ச்சி செய்து வந்தார். இதனால் குழந்தைகள் தந்தையிடம் வளர்ந்து வந்தனர்.*

*அவரின் மனஉளைச்சல் மற்றும் பணிச்சுமை காரணமாக அவர் சமண மதத்தில் அதிக ஈடுபாட்டுடன் பணிபுரிந்தார். மேலும், திருவள்ளுவர் சமணராக இருக்க வாய்ப்புள்ளது என்பது தொடர்பாக அவர் எழுதிய பல ஆராய்ச்சி கட்டுரைகள் உலக அளவில் பெரிதும் வரவேற்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக அவர் சமண மதத்திற்கு ஈர்க்கப்பட்டார். அது மட்டுமன்றி, தன் கணவரின் ஒப்புதல் இல்லாமல், ஒரு இரகசிய சடங்கின் மூலமாக சமண மதத்திற்கு மாறினார். டிசம்பர் 2010-ல் நடைபெற்ற இந்நிகழ்வு அனைவருக்கும் பின்னரே தெரியவந்தது.*

ஒரு நாள் கமலா சமண மதம் தழுவியது அவரது கணவர் சிதம்பரத்திற்கும் அவரது குடும்பத்தாருக்கும் தெரிய வந்தது. அதன்பிறகு 2011 டிசம்பரில் வழக்குரைஞர் மூலமாக அறிவிக்கை ஒன்றை கமலாவிற்கு அனுப்பினார்.

அதில் கமலாவின் தந்தை உறுதியளித்தபடி தென்மாவட்டத்தில் தனது குடும்பத்தார் வசித்து வரும் இடத்திற்கு பணிமாற்றம் பெற்றுக் கொண்டு வருமாறு கோரியிருந்தார். இதற்கு கமலா உடன்படாததால் சிதம்பரம் குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி வழக்கு தொடர்ந்தார். அதில் கமலாவின் தகப்பனார் கொடுத்த உறுதி ஆவணம் ஆதாரமாக சமர்பிக்கப்பட்டது. அது இரு தரப்பினராலும் உண்மையான ஆவணம் என ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும் சிதம்பரம் தன் குடும்ப ஆச்சாரப்படி சமய சடங்குகளில் தன்னுடன் தன் மனைவி கமலா பங்கேற்பது மிகவும் முக்கியதுவம் வாய்ந்தது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலுரையாக கமலா, தான் சமண மதத்தை தழுவியதால் தமிழ் சமண இனத்தை பாதுகாக்கவும், தமிழ் சமண சமய நெறிகள், பூஜை வழிமுறைகள் மற்றும் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள சமண மத வழிபாட்டு தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெளிவாக தனக்கு இந்து சமயத்தில் நம்பிக்கை இல்லை என்றும் தன் கணவர் சிதம்பரம் அது சம்பந்தமாக செய்யும் பூஜைகளில் தன்னால் கலந்து கொள்ள முடியாது என்றும் எதிர்வாதமாக சமர்ப்பித்துள்ளார்.

ஆயினும் தான் மனப்பூர்வமாக அவருடன் இல்வாழ்க்கையில் ஈடுபட்டு வாழ விரும்புவதாகவும், குழந்தைகளைப் பேணி வளர்க்க விரும்புவதாகவும் தெளிவுபட கூறியுள்ளார்.

இருப்பினும் சிதம்பரம் பங்கேற்கும் மதச் சடங்கள் எதிலும் தன்னால் அவருடைய மனைவி என்ற முறையில் பங்கேற்க இயலாது என்றும், தன்னுடைய விருப்பத்தின்படி தான் விரும்பும் மதத்தைப் பின்பற்ற அனுமதிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

திருமணத்தின்போது கமலாவின் தகப்பனார் கொடுத்த வாக்குறுதியை மீறியது ஏமாற்றுதல் ஆகும் என்று சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார். மேலும் சிதரம்பரம் தனது வாதத்தில் கமலா தனது குடும்ப ஆச்சாரப்படி தனது மனைவியாக பூஜை மற்றும் மதச் சடங்குகளில் பங்கேற்பது அவசியம் எனவும் அவ்வாறு கமலா பங்கேற்காததால் தனது கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுத்திவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தரப்பினர் இருவரும் எந்த இடத்தில் தங்களது மண வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக இருவரில் யாருக்கு அந்த உரிமை உள்ளது என்று இந்து திருமணச் சட்டத்தில் குறிப்பிடப்படாத நிலையில் அந்த உரிமை இந்து மத கோட்பாடுகளின் படி கணவரிடமே உள்ளது என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

தரப்பினர்கள் இருவர்களின் இடையே கடந்த மூன்று வருடங்களாக உடல் அளவிலான தொடர்போ அல்லது பேச்சுத் தொடர்போ இல்லாத நிலையில் கமலா அவ்வப்போது குழந்தைகளை மட்டும் வந்து பார்த்துச் சென்றுள்ளார்.

இந்த வழக்கை தாக்கல் செய்த பிறகு முதன்மை கும்டுப நல நீதிபதி அவர்கள் வழக்கின் தரப்பினர்களை சமரசத்திற்காக, சமரச மையத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனால் சமரச மையம் சமரச முயற்சி தோல்வியுற்றதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். தரப்பினர்கள் தங்களையே சாட்சிகளாக விசாரித்து, தாங்கள் தந்த பெரும்பான்மையான வாக்குமூலம் உண்மை என்று ஒப்புக்கொண்டு மேலும், இது தொடர்பாக தங்களது வாதங்களை வைக்க ஒப்புக்கொண்டனர்.

மேலும், இப்பிரதான வழக்கின் தீர்வுக்கு பிறகு குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு மற்றும் ஜீவனாம்சம் தொடர்பானைவைகளை பின்னர் விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ளலாம் என்றும் இரு தரப்பினர்களும் சம்மதம் தெரிவித்ததை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு பிரதான வழக்கு விசாரணை இரு தரப்பினர்களின் வாதத்திற்காக விடப்பட்டது.

# டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுச்சேரி
# சேச அய்யங்கார் நினைவு தேசிய தமிழ் வழக்கு வாதப் போட்டி
## சனவரி 2017

## விதிமுறைகள்

1. போட்டி நாட்கள் : *27-01-2017 (வெள்ளி) முதல் 29-01-2017 (ஞாயிறு) வரை*

2. நிகழ்விடம் : டாக்டர். அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுச்சேரி.

3. அணியினர்க்கான தகுதிகள்:

   - ✰ சட்டக் கல்லூரிகளில் / பல்கலைக் கழகங்களில்தற்போது ஐந்தாண்டு அல்லது மூன்றாண்டு சட்டப்படிப்பில் பயின்றுவரும் மாணவர்கள் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள இயலும்.
   - ✰ ஒவ்வொரு கல்லூரி / பல்கலை கழகத்திற்கு ஒரு அணி மட்டும் அனுமதிக்கப்படும்.
   - ✰ ஒவ்வொரு அணிக்கும் இரண்டு வழக்காடுபவர்கள் மற்றும் ஒரு ஆராய்ச்சியாளர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

4. சீருடை : பங்கேற்பாளர்கள் மாணவ வழக்குரைஞர்க்கான உரிய சீருடையில் மட்டுமே போட்டி நடைபெறும் மாதிரி நீதிமன்ற அறைக்குள் அனுமதிக்கப்படுவர்.

5. வழக்காடும் மொழி : இந்த வழக்குவாதப் போட்டிக்கு தமிழ்மொழி மட்டுமே வழக்காடும் மொழியாக அனுமதிக்கப்படும். ஆங்கிலச் சொற்களை பயன்படுத்தக்கூடாது.

6. அணி பதிவு செய்யும் முறை: ஒவ்வொரு கல்லூரி / பல்கலைக் கழகத்திற்கான அணியும் இணைப்பில் கண்ட பதிவுப்படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து கல்லூரி முதல்வர் / துணை வேந்தர் மேல் ஒப்புதலுடன் 30-12-2016 அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

   முதல்வர்
   டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி,
   காலாப்பட்டு, மாத்தூர் சாலை,
   புதுச்சேரி - 605 014.

   - ✰ பதிவு படிவத்தின் நகலை 30-12-2016 அன்று மாலை 5.00 மணிக்குள் **aglctamilmoot@gmail.com** என்ற மின்அஞ்சலுக்கு அனுப்பி உறுதி செய்ய வேண்டும்.

   - ✰ முறையாக பதிவு செய்யப்பட்ட அணிகள் 27-01-2017 அன்று மதியம் 1.00 மணிக்கு வழக்குவாதப் போட்டி அமைப்பு குழுவிடம் நேரில் தங்களின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.

7. பதிவுக் கட்டணம் : பதிவு செய்யும் ஒவ்வொரு அணியும் பதிவுக் கட்டணம் ரூபாய். 1000/- D.D. ஆக செலுத்த வேண்டும். Principal, Dr. Ambedkar Govt. Law College என்ற பெயருக்கு புதுச்சேரியில் உள்ள ஏதாவது ஒரு வங்கி கிளையில் மாற்றத் தக்கதாக எடுத்து அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தாமல் அனுப்பப்படும் பதிவுப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. எழுத்துப்பூர்வமான வாதுரைகள்: கீழ்கண்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு எழுத்துப்பூர்வமான வாதுரைகள் சமர்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

   - ✰ எழுத்துப்பூர்வமான வாதுரைகள் தமிழில் மட்டுமே இருக்க வேண்டும். தமிழ் சொற்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

   - ✰ ஒவ்வொரு அணியும் இருதரப்பினர்களுக்குமான எழுத்துப்பூர்வ வாதுரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

- ✰ எழுத்துப்பூர்வமான வாதுரையை சமர்பித்த பிறகு அதில் திருத்தம் செய்யவோ, இணைப்புகள் சமர்ப்பிக்கவோ, கூடுதலாக எழுத்துப்பூர்வமான வாதுரை சமர்ப்பிக்கவோ, வாதுரைகளை மேம்படுத்தவோ கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது.
- ✰ இருதரப்பினர்களுக்குமான எழுத்துப் பூர்வமான வாதுரைகளை தனித்தனியாக 4 பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்.
- ✰ எழுத்துப்பூர்வமான வாதுரைகளை முறையாக தையலிடப்பட்ட (Spiral) புத்தக வடிவில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. எழுத்துப்பூர்வமான வாதுரைகளில் இடம் பெற வேண்டியவை:

- ✰ பொருளடக்கம்
- ✰ தீர்ப்புகளி ன் பட்டியல்
- ✰ நீதிமன்ற ஆள்வரை
- ✰ வழக்கின் பொருண்மைகள் சுருக்கமாக
- ✰ எழுவினாக்கள்
- ✰ சுருக்க வாதுரை
- ✰ விரிவான வாதுரை
- ✰ இறஞ்சுதல்

மனுதாரரின் வாதுரை மேல் அட்டை மஞ்சள் நிறத்திலும், எதிர்மனுதாரரின் வாதுரை மேல்அட்டை சிகப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.

10. எழுத்துப்பூர்வமான வாதுரையின் வடிவம்:

- ✰ வரிகளுக்கு இடையிலான இடைவெளி 1.5 வரி இடைவெளி
- ✰ நான்கு பக்கமும் 1 அங்குலம் அளவு விளிம்பு இடைவெளி விட வேண்டும்
- ✰ எழுத்து வடிவம் 12 அளவு
- ✰ அடிக்குறிப்புகள் 10 அளவு
- ✰ பக்க எண்கள் தாளின் கீழ்ப்பக்கத்தில் மையப் பகுதியில் கொடுக்க வேண்டும்
- ✰ எழுத்துப்பூர்வமான வாதுரையில் இணைப்புகள், புகைப்படங்கள், வரைபடங்கள், சான்றிதழ்கள், வாக்குமூலங்கள், பிரமாண வாக்குமூலங்கள் போன்றவை எதுவும் இருக்கக் கூடாது.
- ✰ எழுத்துப்பூர்வமான வாதுரைகள் அனைத்தையும் உள்ளடக்கி மொத்தமாக 30 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- ✰ எழுத்துப்பூர்வமான வாதுரையில் நேரடியாகவோ, மறைமுகமாவோ அணியை அடையாளப் படுத்தும் வகையில் பங்கேற்பாளர்களின் பெயர்களோ, கல்லூரியின் பெயரோ வேறு எவ்வகையான அடையாளங்களோ இடம் பெறக்கூடாது.

எழுத்துப்பூர்வமான வாதுரைகள் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் 27-01-2017 மதியம் 1.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

11. எழுத்துப்பூர்வமான வாதுரைக்களுக்கான மதிப்பெண்கள்: எழுத்துப்பூர்வமான வாதுரைக்களுக்கான மொத்த மதிப்பெண்கள் 20 இந்த மதிப்பெண்கள் கீழ்கண்ட காரணிகளின் அடிப்படையில் வழங்கப்படும்.

| வ.எண் | மதிப்பெண்களுக்கான காரணிகள் | அதிகபட்ச மதிப்பெண் |
|---|---|---|
| 1. | பொருண்மை குறித்த தெளிவு | 4 |
| 2. | சட்ட நுண்ணறிவு | 4 |
| 3. | சட்டம், பொருண்மைகளின் பகுப்பாய்வு | 4 |
| 4. | முன்தீர்ப்புகளை கையாளும் திறன் | 4 |
| 5. | இலக்கணம், மொழிநடை சட்டத் தமிழ் ஆளுமை | 4 |

12. போட்டிச் சுற்றுகள்:

- ✰ தகுதிச்சுற்றில் ஒவ்வொரு அணியும் இரண்டு கட்டமாக மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் சார்பில் வாதிட வேண்டும். இரண்டு கட்ட போட்டியில் மொத்த மதிப்பெண் அடிப்படையில் முதல் 8 அணிகள் கால் இறுதி சுற்றிற்கு தகுதி பெறுவார்கள்.
- ✰ கால் இறுதி சுற்றில் வெற்றி பெறும் 4 அணிகள் அரையிறுதிச் சுற்றிக்கு தகுதி பெறுவார்கள்.
- ✰ அரையிறுதிச் சுற்றில் வெற்றி பெறும் இரண்டு அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தகுதிப் பெறுவார்கள்.
- ✰ அனைத்து சுற்றுகளுக்கும் அவர்கள் வாதிட வேண்டிய தரப்பு மற்றும் எதிர் அணியும் குலுக்கல் முறையில் போட்டி நாளன்று தேர்வு செய்யப்படும்.
- ✰ போட்டி நடைபெறும் அறைகளில் வாதிடும் அணிகளைத் தவிர வேறு அணிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, பார்வையாளராகவோ இருக்க அனுமதியில்லை.
- ✰ அவ்வாறு ஏதேனும் அமைப்பு குழுவால் கண்டறியப்படின் சம்பந்தப்பட்ட அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும். இதில் அமைப்பு குழுவின் முடிவே இறுதியானது. ஒவ்வொரு அணிகும் வழக்காட 20 நிமிடங்களும், மறுத்தளிக்க 5 நிமிடங்களும், மறுத்தளித்தல் குறித்த விளக்கம் கொடுக்க 5 நிமிடங்களும், வழங்கப்படும்.
- ✰ போட்டிக்கான மொத்த மதிப்பெண்கள் 100 - (எழுத்துப்பூர்வமான வாதங்களுக்கு மதிப்பெண்கள் 20, வாய்மொழி வாதங்களுக்கு மதிப்பெண்கள் 80)

| வ.எண் | மதிப்பெண்களுக்கான காரணிகள் | அதிகபட்ச மதிப்பெண் |
|---|---|---|
| 1. | பொருண்மை, சட்டம் குறித்த தெளிவு | 15 |
| 2. | சட்டகோட்பாடுகளை எடுத்தாளும் திறன் | 15 |
| 3. | கேள்விகளுக்கு பதில் அளிக்கும் திறன் | 15 |
| 4. | முன்தீர்ப்புகளை எடுத்தாளும் திறன் | 15 |
| 5. | நீதிமன்றத்தில் நடந்து கொள்ளும் முறை | 10 |
| 6. | இலக்கணம், மொழிநடை | 10 |

- ✰ போட்டியாளர்கள் வாதிடும்பொழுது அவர்களின் அடையாளத்தையோ, அவர்கள் சார்ந்த கல்லூரியின் அடையாளத்தையோ அறிந்து கொள்ளும் வகையில் எவ்விதமான அடையாளத்தையும், அடையாள அட்டைகளையும் நீதிமன்ற அறைக்குள் பயன்படுத்தக் கூடாது. மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.
- ✰ போட்டியாளர்கள் அதிகபட்ச அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகளைப் பின்பற்ற வேண்டும். மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.
- ✰ வாதிடும் பொழுது அணியினர் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்பு (தமிழ் / ஆங்கிலம்) திரட்டுகள் மற்றும் சட்டப்புத்தகங்களை (தமிழ் / ஆங்கிலம்) பயன்படுத்திக் கொள்ளலாம். வேண்டுமானால் அவற்றின் நகல்களையும் வழக்குவாத நீதியரசர்களிடம் சமர்பிக்கலாம்.

13. சிறந்த மாணவ மற்றும் மாணவி வழக்குரைஞர்கள்:

தகுதிச்சுற்று, கால்இறுதி, அரையிறுதி மற்றும் இறுதி சுற்றில் பங்கேற்கும் அணிகளில் இருந்து வழக்காடுபவர்களில் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி மதிப்பெண் அடிப்படையில் சிறந்த மாணவ மற்று மாணவி வழக்குரைஞர்களாக தெரிவு செய்யப்படுவர்.

14. அணிகளுக்கான தங்குமிடம்:

- ✰ அணியில் பங்கேற்பவர்களுக்கு 27-01-2017 (வெள்ளி) மதியம் 1.00 மணி முதல் 30-01-2017 (திங்கள்) மதியம் 12.00 மணிவரை தங்குமிடம் வழங்கப்படும். எக்காரணம் கொண்டும் இதில் விதிவிலக்களிக்கப்படமாட்டாது.

- ✰ அணியில் பங்கேற்பவர்களை தவிர மற்றவர்கள் யாரும் அணிகளுக்கான தங்குமிடத்தில் அனுமதியின்றி தங்க அனுமதியில்லை. மீறும் பட்சத்தில் அந்த அணி உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்படும்.

- ✰ அணியில் பங்கேற்பவர்கள் அமைப்பு குழுவால் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்குமிடங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு, தங்குமிட விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். மீறும் பட்சத்தில் ஏற்படும் விளைவுகளுக்கு சம்மந்தப்பட்ட அந்த அணி பங்கேற்பாளர்களே பொறுப்பேற்க வேண்டும்.

15. உணவு : அணியில் பங்கேற்பவர்களுக்கு 27-01-2017 இரவு முதல் 29-01-2017 மதியம் வரை கட்டணமின்றி உணவு வழங்கப்படும்.

16. பரிசுகள் : அணிகளுக்கான முதல் மற்றும் இரண்டாம் பரிசு வழங்கப்படும். அதேபோல் சிறந்த மாணவ மற்றும் மாணவி வழக்குரைஞர் ஒருவருக்கும், சிறந்த எழுத்துப்பூர்வமான வாதுரைக்கும் பரிசு வழங்கப்படும் (பரிசுத் தொகை பின்னர் அறிவிக்கப்படும்).



## பதிவுப் படிவம்

### I. கல்லூரி / பல்கலைக் கழகம் குறித்த விவரம்

1. கல்லூரி / பல்கலைக் கழகத்தின் பெயர் :
2. மின்னஞ்சல் முகவரி :
3. தொடர்புக்கான பேராசிரியர் பெயர் :
4. பேராசிரியர் கைபேசி எண் :

### II. முதல் மாணவ வழக்குரைஞர் குறித்த விவரம்

1. பெயர் & வகுப்பு :
2. மின்னஞ்சல் முகவரி :
3. கைபேசி எண் :
4. கையொப்பம் :

சமீபத்திய புகைப்படம்

### III. இரண்டாம் மாணவ வழக்குரைஞர் குறித்த விபரம்

1. பெயர் & வகுப்பு :
2. மின்னஞ்சல் முகவரி :
3. கைபேசி எண் :
4. கையொப்பம்

சமீபத்திய புகைப்படம்

### IV. மாணவ ஆராய்ச்சியாளர் குறித்த விபரம்

1. பெயர் & வகுப்பு :
2. மின்னஞ்சல் முகவரி :
3. கைபேசி எண் :
4. கையொப்பம்

சமீபத்திய புகைப்படம்

முதல்வர் கையொப்பம் கல்லூரி முத்திரையுடன்